APR 1912 MADRAS

சக்ரவர்த்தினி.

"கேடில் விழுச்செல்வங் கல்வி ஒருவருக்கு
மாடல்ல மற்றை யவை."

VOL. VII. } MADRAS, JANUARY 1912. { NO. 6.
தொகுதி எ. } சென்னை ஜனவரி 1912. { பகுதி சு.

காலஞ்சென்ற ஹானரபில் மிஸ்டர் வி. கிருஷ்ணசாமி அய்யர் சி. எஸ். ஐ.

சென்றமாதத்துச்சக்கிரவர்த்தினியில் மிஸ்டர், வி. கிருஷ்ண சாமி அய்யரவர்கள் இறந்துபோனதைப்பற்றிச் சிறிது எழுதி விடுத்து மற்ற விவரங்கள் இப்பத்திரிகையில் எழுதுவதாக வெளி யிட்டது நம் நேயர்களுக்கு ஞாபக மிருக்கும்.

மிஸ்டர். வி. கிருஷ்ணசாமி அய்யர் காலஞ்சென்றதைப் பற்றி நமது தமிழ் நாடேயன்றி இந்தியாவில் எல்லாப் பாகங் களும் கவர்மெண்டும் பெருந்துக்கம் கொண்டனவெனில் அவர் பேரறிவுபடைத்த பெரியவரென்பதையும் இந்தியாவுக்கும் கவர் மெண்டுக்கும் நன்மைநாடி உழைக்கும் உபகாரி யென்பதையும் பற்றிப் பேசவேண்டுமா?

அத்தகைய மகானைப்பற்றி நம்நேயர்களனைவரும் அறிய வேண்டிய அவசியம் கருதி நாம் இங்கு எழுதுவது மிகையாகா தல்லவா? நாமேயன்றி உலகத்தில் உள்ள பத்திரிகைகளெல்லாம் அவர் பெருமையையும் அவர் தேசத்திற்கும் கவர்மெண்டிற்கும் செய்த நன்மைகளையும் அவர் தாம் வகித்த உத்தியோகங்களில்

காட்டிய அபாரசாமார்த்தியங்களையும் புகழ்ந்து பேசி அவரை இழந்ததற்கு துக்கித்துள்ளன. உண்மையில் அவர் இறந்தது பெரிய நஷ்டமென்பதை நாமும் ஒப்புக்கொள்ளுகிறோம்.

இவர் தஞ்சாவூர் ஜில்லாவில் பிறந்த விப்ரகுலசிரேஸ்டர் இவர் சென்னை பிரசிடென்ஸிகாலேஜில் படித்து பி. ஏ. பட்டம் பெற்று பிறகு சட்டப்பரீக்ஷை கொடுத்து வக்கீல் தொழிலில் பிரவேசித்தார். பிரவேசித்த சிலவருஷங்களுக்கெல்லாம் அத்தொழிலில் இணையற்றசாமார்த்தியம் காட்டி நல்லபேர் பெற்றனர். காலஞ்சென்ற வி. பாஷ்யமய்யங்காருக்குப் பிறகு இவரே சென்னை ஐகோர்ட்டுவக்கீல்களுள் முதன்மையாயிருந்தார். இவர் தந்தைவெங்கட்டராமய்யர்என்பவரும் டிஸ்டிரிக்ட்முனிசீபாயிருந்திருக்கிறார். அய்யர்தமது ஆரம்பக்கல்வியை திருவிடைமருதூர் பள்ளிக்கூடத்திலும் பின்னர் தஞ்சை செயிண்டுபீடர்ஸ்காலேஜிலும் அதன் பிறகு கும்பகோணத்திலும் கடைசியாய் சென்னை பிரசிடென்ஸிகாலேஜிலுமாகப்படித்து வந்தனர் எனச் சொல்லப்படுகிறது. பள்ளிக்கூடத்தில் பி. ஏ. வகுப்பிற்படிக்கும்பொழுது அய்யர் தமக்கு ஸம்ஸ்கிருத முதலியபாஷைகளில் இருந்தபாண்டியத்தியத்திற்காக உபகாரச்சம்பளங்களும் பெற்று உபாத்தியாயர்கள் தம்மைப் புகழ விளங்கினரெனத்தெரிகிறது.

இவர் பெரு நோக்கமுடையவர். பரோபகாரசிந்தையும் மனப்பூர்வமான அனுதாபமும் உடையவர். வக்கீலாயிருந்தபோது சென்னைராஜதானியில் அநேக இடங்களுக்குச்சென்று இணையற்ற சாமர்த்தியம் காட்டி நியாயமுறைதவறாது பேசி யாவரும் வியந்து புகழும்படி விளங்கினர். அப்பொழுது நமது அய்யர் யூனிவர்சிடிபெல்லோவாகத்தெரிந்தெடுக்கப்பட்டனர். செனெட்டுக்கும்சிண்டுகேட்டுக்கும் ஒரேமெம்பராயினர். அச்சமயங்களில் இவர் நன்மைபயப்பனவானகாரியங்கள் பலவற்றைச் செய்திருக்கிறார். சென்னை யூனிவர்சிடியின் பிரதிநிதியாகச் சட்டநிருபண சபையின் மெம்பர்ஸ்தானம்வகித்து கவர்மெண்டு மெச்சும்படி

யான வேலைத்திரத்தைக்காட்டினர். இவர்செய்த உழைப்பின் பலனாக 1901-ம் வருஷம் கடைசியில் சென்னை ஹைகோர்ட்டு ஜட்ஜுகளில் எட்டாவதாகநியமிக்கப்பட்டனர். ஜட்ஜுவேலையில் அதிக நாள் இல்லாமற்போன போதிலும் இருந்த சொற்பநாளில் ஜட்ஜிகளுக்குள் இவரே திறமைசாலியெனப் பேர்பெற்றனர். பின்னர் நிர்வாக சபைமெம்பராக விருந்த பொப்பிலிமகாராஜா தமது வேலையினின்றும் நீங்க, அத்தருணத்தில் அந்த உயர்பதவிக்கு இவரே தகுதியானவர் எனக்கருதி கவர்னர் ஸர் ஆர்தர்லாலி இவர் பெயரை இந்தியா செகிரிடேரிக்கு சிபார்சு செய்தார். அவ்விதமே வேலைகொடுக்கப்பட்டது. இவ்வுத்தியோகத்திலிவர் 11-மாதகாலம் இருந்தனர். அப்பொழுது இவர்வசம் முனிசிபல் இலாகா ஒப்புவிக்கப்பட்டது. இன்னும் நெடுங்காலமிருந்து இந்துக்களுக்கு நன்மை செய்வதற்கின்றி தேகவியோகமானது பெருந்துக்கமே யாகுமன்றோ.

இந்தமகான் செய்த தர்மங்கள் அளவிறந்தன, அவர் ஆயிரக்கணக்காகத் தர்மவிஷயத்திற்குப் பணச்செலவிட்டிருக்கின்றனர். செய்த தருமம் ஒவ்வொன்றும் தகுமதகும் என்று உலகம்மெச்சக்கூடியது. மைலாப்பூரில்சம்ஸ்கிருதகாலேஜ் ஒன்றும் வேதபாடசாலையும் ஸ்தாபித்திருக்கின்றனர். அங்கு நடந்துவரும் தென்னிந்தியா சங்கீத்தின் ஸ்தாபனத்திற்கும் இவரே காரணமானவர்.

இந்தமகான்மகாபுத்திசாலி. தாமெடுத்துக்கொண்டவிஷயங்களனைத்தையும், பூர்த்திபண்ணுவதிலேயே கண்ணும் கருத்துமாக விருந்துழைத்துவந்தனர். தமது உடல்பொருள்ஆவிமூன்றையும், உலகத்தின் நன்மைக்காகத் தத்தஞ்செய்தவரென்றே சொல்லவேண்டும். இவர் சுந்தர ரூபமுடையவர். இவர்தமது வாழ்நாளை வெகுசுகமாகக்கழித்தனர். கஷ்டமென்பதையறியாராயினும்மெலியாரையும் கஷ்டப்படுவோரையும் நோக்கும்போது உள்ளத்தில் இரக்கம் என்கிற அருமையான குணத்தைக்கொண்டு அவர்களை நல்ல நிலைமைக்குக்கொண்டுவரவும் எங்கெந்த எற்பாடுசெய்யின்

அது தேசத்துக்கு க்ஷேமந்தருவதாகு மென்பதையும் பற்றி யோசித்து அதற்குத்தக்க வழிகளைத்தம் கைப்பொருள்களைச் செலவிட்டுச் செய்திருக்கின்றனர். இந்து யூனிவர்ஸிடியொன்று ஸ்தாபிப்பதிலும் சென்னை யூனிவர்ஸிடியில் தேசபாஷைப்பரீக்ஷையேற்படுத்துவதிலும் தமது நோக்கத்தைச் செலுத்தினர். இவர் பிரவேசியாதபொதுக்காரியங்கள் இல்லையென்று கூறினும் அமையும்.

இந்த தேசோபகாரி இறக்கும்போது இவருக்கு வயது 50க்குள்ளிருக்குமென்றேசொல்லப்படுகிறது. இவர் இந்தவயதிற்குள் "பொருளில்லார்க்கிவ்வுலகமில்லை," யென்பதையுணர்ந்து தமது பெரும் முயற்சியால் அளவற்ற திரவியத்தைச் சம்பாதித்து "அருளில்லார்க்கிவ்வுலகமில்லை" என்பது கருதி ஈட்டிய பொருளைத்தர்மமார்க்கத்திற்செலவிட்டார் மிகுந்ததைக்கொண்டு தமது மக்கள்தமக்குப்பிற்காலம் சுகமாய் வாழ்வதற்கேற்பப்பெரிய பங்களாக்களும் பூஸ்திதிகளும் ஆபரணங்களும் பாங்கியில் வட்டிக்குத்தொகை வளரவும் செய்து இகபரசுகங்களையும் புகழ்ச்சியையும் தேடிக்கொண்டனர்.

இவர் டெல்லிதர்பார்க்குப்போய் அவிடம் ஸி, எஸ். ஐ, பட்டம் பெற்றனர். இவர் அங்கேயே தேக அசௌக்கியமடைந்து தமதிருப்பிடம் வந்து சில நாளேனுமில்லாமல்வந்த இரண்டொருதினத்தில் விண்ணுலகடையநேர்ந்ததே எல்லாருக்கும் பெரும் விசனத்தையும் வியப்பையும் உண்டாக்கிற்று. இத்தகையமகானை யிழக்க நேர்ந்தது இந்திக்களின்புண்ணியக்குறை வென்பதையுங் கூறவேண்டுமா?

பாலவனத்தம் ஜமீன்தாரும் மதுரைத்தமிழ்ச்சங்கம் அக்கிராசனாதிபதியும் ஆகிய ஸ்ரீமான் பொ. பண்டித் துரைசாமித் தேவர் அவர்கள் காலஞ்சென்றமைக்கிரங்கிப் பாடிய

சரமகவிகள்.

சீர்பூத்த திருமறைகள் சென்றெங்குந் தேடியுந்தாம்
தெரியக் காணாக்
கார்பூத்த மிடற்றோனுங் கலைநலக்கூட் டுணும் விருப்பாற்
கழகஞ் சார்ந்தே
ஏர்பூத்த இளந்தமிழின் இன்சுவையை இனிதுணர்ந்தே
இறைய னாரய்ப்
பேர்பூத்துப் பிரங்கியதென் மதுரைநகர் இஞ்ஞான்றும்
பெருமை யேற

[கார்பூத்தமிடற்றோன்—நீலகண்டனாகியபரமசிவன், கழகம்—சங்கம்]

முன்பாண்டித் துரைப்பெரியோய் முச்சங்கம் நாட்டினரம்
மொழிமா றுதெம்
மன்பாண்டித் துரைப்பெரியோய் மன்னுதமிழ் மொழிமீது
வரம் பிலாத
அன்பாண்ட அகத்தொடுசெந் தமிழ்ச்சங்கம் அமைத்தளித்த
அண்ண லேநீ
துன்பாண்ட அகத்தொடுசெந் தமிழ்ப்புலவர் துடித்திடப்பார்
துறந்த னன்றே

[மன்று—நிலைபெற்ற, அண்ணலே— புருஷசிரேஷ்டனே, பார்—பூமி]

ஊருணியும் பயன்மாமு முண்ணீரு கனிகளுமே
யுதவும் உன்போல்
பேருணவும் ஆடைகளும் பெரும்பரிசுந் தந்திடுமோ
பேசுங் கால் நீ
சீரணவும் மதுரையிலோர் செய்புடைய வறிஞனதைத்
திருத்து மாறு

பேரணவு தமிழ்ச்சங்கம் வளர்த்தனையே அதைமறைத்தல்
 பிழையே ஐயா!

[அணவுதல்-பொருந்துதல். செய்-வயல்.]

தந்தையாந் தமிழ்வேந்தர் பொன்னுச்சாமித்தேவர்
 தவத்தா லன்றி
விந்தையாய்த் தமிழுகலமேனுளிற் செய்தவத்தின்
 விளைவாய்த் தோன்றிச்
சிந்தையினிற் சிவநேசஞ் செழுங்கொடைசெந் தமிழ்போற்றல்
 சிறக்கச் சேர்ந்தே
தந்தையினிற் சதகுணமாம் மைந்தனெனத் தருமொழியைத்
 தாபித் தாயே
நண்ணரிய கல்விபொறை நடுநிலைமை முதலாய
 நலங்க ளார்ந்த
எண்ணரிய பெரும்புலவர்க்கிங் கோர்தமிழ்ச் சங்கமுண்டாக்
 கியதற் கேற்ப
விண்ணுறையும்வெறும்புலவர்தமக்கோர்சங்கம்அமைக்கவெனும்
 விழைவோ வன்றி
பண்ணுறையின் சொல்லாளன் பாற்கரபூ பனைக்காணும்
 பரிவோ சென்றாய்

நண்ணரிய-சேருதற்கருமையான, பொறை-பொறுமை, புலவர்-தேவர்
 பண்-சங்கீதம்; பாற்கரபூபன்-பாஸ்கர ஸேதுபதியவர்கள்.

இனித்தமிழப்பா வாணரெலாந் தமிழ் வளர்க்கும் எந்தலென
 யாரைச் சொல்வார்
இனித்தமிழில் தேனெனவே இனிக்கும்பிர சங்கியென
 யார்பேர் பூண்டார்
இனித்தமிழர் தொகை நூல்கள் இயற்றுவர்நின் போல் யாரே
 என்பர் சால
அனத்தமுழுன் றேழுபால வனத்தமுதும்மினியார்
 இறைவன் என்னும்

[எந்தல்-புருசிரேஷ்டன் தொகை; நூல்கள்-சைவமஞ்சரி
பன்னூற்றிரட்டு முதலிய]

மன்னரியல் முழுதுணரும் மண்டலேசுவரன் ஜார்ஜ்
மன்னர் மன்னன்
நன்னரியம் முழங்கிட நம் நாடெய்தி முடிசூடும்
நற்காலத்தில்
பன்னரிய திருமகளும் பார்மகளும் நாமகளும்
பரிந்து சேரும்
உன்னரிய உயர்குணத்தோய் உனைப்பிரிதல் தமிழ்மக்கள்
ஊழே போலும்.

[இயம்-வாத்தியம், பன்னரிய-சொல்லற்கரிய; உன்னரிய-நினைத்தற்கரிய]

வேறு.

வேண்டிற் றுரைசெயுமுன் வேண்டறிஞர்க் கீந்துவந்த
யாண்டித் துரைவிண் படர்ந்தனனே ஐயகோ
பாண்டித் துரைக்குநிகர் யாங்காணப் போகின்றோம்
ஈண்டித் தரையிலினி இன்றமிழ்ப்பா வாணர்காள்.

வேறு.

ஆண்டு விரோதிக்ருத்தில் ஆங்கார்த் திகைமதியில்
தீண்டுப் பதினேழாந் தெய்தியினில்— ஈண்டுசீர்ச்
சுக்கிலப க்ஷேகா தசியாண்டித் துறைவிண்
புக்கான் அரனையகம் பூண்டு.

[ஈண்டு சீர்-சிறப்பு நிறைந்த.]

வே. முத்துசாமி ஐயன், பி. ஏ. எல். டி.
ஹைஸ்கூல், மதனப்பள்ளி

தொட்ட தெல்லாம் பொன்.

(தொடர்ச்சி.)

இதற்குள் இராஜசேகரி மெதுவாகக் கதவைத் திறந்து கொண்டு, தன்னுடைய மேல்பட்டுத் துணியை தன் கண்களில் வைத்துக்கொண்டு, அழுதுகொண்டுவந்து நின்றாள்.

ஆஹா! "என் செல்வமே இச்சுபதினத்தில் உன்னை அழும்படி செய்தது யாது" என்று மகிபாலன் கூறினான். இராஜசேகரி மேல்பட்டை கண்ணினின்றும் எடுக்காமலே தன்னுடைய கையை நீட்டினாள். அதில் மகிபாலன் தங்கமாக மாற்றின ஒரு ரோஜாஇருந்தது "வெகுஅழகாக விருக்கிறதே; இந்தப்பளபளப்பான தங்கரோஜாவில் உன்னை அழும்படி செய்ய என்ன விருக்கிறது." என்றான் மகிபாலன்.

ஆ அருமைத் தகப்பனாரே! இது அழகான புஷ்பமல்ல; இது மிகவும் வெறுக்கத்தக்க புஷபம். இம் மாதிரி புஷ்பம் இதுகாறும் பூகததில்லை." என்று அழுதுகொண்டே சொன்னாள். "நான் காலையில் எழுந்ததும் நன்றாக டிரஸ்பண்ணிக்கொண்டு தோட்டத்திற்குப் புஷ்பம் கொய்வதற்கு போனேன். ஏனென்றால்புஷ்பங்கள்உமதுமனதிற்குஇன்பமாகவிருக்கும் அதுவும் உம்முடைய அருமைமகளால்சேகரித்துக்கொண்டுவரப்பட்டால் நீர் மிகவும் சந்தோஷப்படுவீர் என்று நினைத்தேன். இப்பொழுது எல்லா புஷ்பங்களும் மஞ்சள்நிறமாகமாறி பறிக்கும் பொழுது கைகளைக்காயப்படுத்துகின்றன. எல்லாப்புஷ்பங்களும் தங்களுடையமிருதுவான இதழ்களையும்,வாசனையையும் இழந்து அழிந்துபோய்விட்டன" என்று அழுதாள்.

பூ! இதற்காகத் தானா! அருமைக்கண்ணாட்டியே நீ அழாமலிரு. என்று அவளுடையமனதிற்கு வருத்தத்தைக் கொடுக்கக்

கூடிய காரியத்தைத் தான் செய்தவனென்று சொல்ல வெட்கி அவளை அமர்த்தினன். உட்கார்ந்து பாலேயும் ரொட்டியும் சாப்பிடு; பால் ஜில்லிட்டுப் போகிறது; தங்க புஷ்பம் (இப்புஷ்பம்) எப்பொழுதும் நீண்டகாலம் வரையிலிருக்கும். சாதாரணபுஷ்பம் ஒரு நாளில் வாடிப்போய்விடும்" என்ருன்.

"இம்மாதிரி புஷ்பம் எனக்கு வேண்டியதேயில்லே; இதன் கல்லான இதழ்கள் என் மூக்கைக்குத்துகின்றன" என்று கையி லிருந்த புஷ்பத்தை வீசி எறிந்து விட்டாள்.

இராஜசேகரி இப்பொழுது சாப்பிட உட்கார்ந்தாள். ஆனல் அவள் பக்கத்தில் சீனக்கிண்ணம் தங்கமாக மாறியிருந் ததைக்கூட கவனிக்கவில்லே. இது இன்னும் ஜாஸ்தி துக்கத்தை உண்டுபண்ணும். கிண்ணத்தின் ஓரங்களிலுள்ள பொம்மைகளையும் மரங்களையும் பார்த்து ஆனந்திப்பாள். இப்பொழுது எல்லாம் மஞ்சளாக மாறிவிட்டன.

பிறகு மகிபாலன் தன்கிண்ணத்தைத்தூக்கிகாபியைவேருரு கிண்ணத்தில் ஊற்றினன். அக்கிண்ணம் உடனே தங்கமாக மாறிவிட்டது. மகிபாலன் இப்பொழுது எல்லாம் தங்கமாக மாறிவிட்டால் எல்லாவற்றையும் எப்படிப் பத்திரப்படுத்துவது என்று கவலேயுற்ருன். அதைப்பற்றி யோசித்துக்கொண்டே யிருந்தான்.

அப்பால் தன் கிண்ணத்திலிருந்து காபியை வாயில் ஊற்றிக் கொண்டான். உடனே காப்பியானது உருகின தங்கமாகமாறி பிறகு தங்கக்கட்டியாக மாறிவிட்டது.

" ஹா " என்று மகிபாலன் கீழே விழுந்தான்.

இராஜசேகரி "அப்பா! அப்பா!!" என்று அழுது கொண்டே கூவினள்.

3

"ஒன்றுமில்லை குழந்தாய் உன்னுடைய பாலை அது ஜில்லிட்டுப் போவதற்குமுன் சாப்பிடு" என்றான்.

அவன் ஒரு வேகவைத்த மீனைப் பரீக்ஷை பார்ப்பதற்காக அதின் வாலைத்தொட்டான். அது உடனே தங்கமீனாக மாறி விட்டது.

"நான்எப்படிக்காலைப்போஜனம் சாப்பிடுவது என்று எனக்குத்தெரியவில்லையே" என்று கதறினான்.

பிறகு ஒரு ரொட்டித் துண்டை எடுத்து வாயிற்போட அது உடனே மஞ்சளாகமாறி கனமான தங்கக்கட்டியாகி விட்டது. ஒரு முட்டையை எடுத்து வெகு சீக்கிரமாக விழுங்க வாயில் போட்டான். அவன் விழுங்குவதற்கு முன் அது தங்க முட்டையாக மாறிவிட்டது.

மகிபாலன் வருத்தமுற்றவனாகி நாற்காலியில் சாய்ந்துகொண்டான். இராஜசேகரி சாப்பிடுவதைப் பார்த்துப் பொறாமைப்பட்டுக்கொண்டிருந்தான். "உயர்ந்தபோஜனம் சாப்பிடக்கூடாததாகவிருக்கிறதே" என்று வருந்தினான்.

இன்னுமொரு முறை ஒரு உருளைக்கிழங்கை வாயில்போட்டுக்கடித்து வெகுசீக்கிரம்விழுங்கிவிடவெண்ணி வாயில்போட்டுக்கடித்தான். அது உடனே தங்கக்கட்டியாகி அவன் வாயைப் பொசுக்கிவிட்டது. மகிபாலன் கதறிக்கொண்டு நாற்காலியை விட்டெழுந்து கூத்தாடினான்.

மகிபாலன் இப்பொழுதும் "தொட்டதெல்லாம் பொன்" என்ற வரனை ஒரு போஜனத்திற்காக இழக்கக் கருதவில்லை.

மறுபடியும் அவன் துக்கத்தாலும் பசியாலும் கதறினான். இராஜசேகரி அவனைச் சமாதானப்படுத்தும் பொருட்டு அவளைக் கட்டிக்கொண்டு முத்தமிட்டாள். இராஜசேகரி! இராஜசேகரி!! என்று கூப்பிட்டான். இராஜசேகரி பதில் பேசவில்லை.

ஐயோபாபாவம்! எவ்வளவு அபாயகரமான வரன்மகிபாலன் வாங்கிக்கொண்டது. இராஜசேகரி தங்கவிக்கிரகமாகிவிட்டாள். அவனுடைய பேராசையின் பலன் இதுதான். அவளுடைய கண்ணீர்த்துளியெல்லாம் கன்னத்தில்வந்து தங்கங்களாக உறைந்துவிட்டது. மகிபாலன்கைகளைபிசைந்துகொண்டு அழுதான். அவன் இப்பொழுது "என்னுடைய பணத்தையெல்லாம் இழந்தாலும் இழக்கிறேன்; இராஜசேகரி பிழைத்தால் போதும்" என்று கதறினன்.

இவ்வாறு கதறிக்கொண்டிருக்குந் தருணத்தில் அவன் எதிரே ஒரு உருவம்வாசற்படியில் நிற்கக்கண்டான்உடனே மகிபாலன்தலையைக்கீழேதொங்கப்போட்டுக்கொண்டான். ஏனென்றால் அவ்வுருவம் இவனுக்கு வரம அளித்தவனே. அவன் சிரித்த முகமாகவே யிருந்தான். பிறகு.

"அப்பா, மகிபாலா. பொன் வரத்தால் எவ்வளவு லாபம் அடைந்தாய்" என்று கேட்டான்.

மகிபாலன் தலையை யசைத்துக்கொண்டு "நான்மிகவும் துன்பப்பட்டுக்கொண்டிருக்கிறேன்" என்றான்.

"ஏன்! நான் வரம் உனக்குக்கொடுக்கவில்லையா? நீ நினைத்ததெல்லாம் உனக்குக்கிடைக்கவில்லையா? எனமகிபாலன் வருத்தமுற்றவனாக விருந்தான்.

பிறகு அவன் மகிபாலனைப்பார்த்து "பொன்வரம் உயர்ந்ததா? ஒரு செம்பு நீர் உயர்ந்ததா?" என்று வினவினன்.

மகிபாலன் ஒரு செம்புத் தண்ணீர் என்று கதறினன்.

பொன்வரம் உயர்ந்ததா? ஒரு துண்டு ரொட்டி உயர்ந்ததா" என்றான்.

"ஓ! ஒருதுண்டு ரொட்டியே உயர்ந்தது" என்றான்.

"பொன்வரம் உயர்ந்ததா? உன் பெண்உயர்ந்ததா?

"ஓ! என் அருமைக்குழந்தைக்கு உலகத்திலுள்ள தங்க மெல்லாம் ஈடாகாது!" என்று கதறினான்.

"முன்னிலும்இப்பொழுதுபுத்திசாலியாயிருக்கிறாய் என்று" மகிபாலனை பார்த்துச்சொன்னான்

இப்பொழுது உனக்குக்கொடுத்த பொன் வரத்தை உன்னை விட்டு நீக்கவேண்டுமா நிஜமாகச் சொல் என்றான்.

"அந்த வரம் எனக்கு ஹிம்ஸையை விளைவிக்கிறது" என்று மகிபாலன் சொன்னான்.

ஒரு ஈ அவன்மூக்கில் உட்கார்ந்தது. அது உடனே தங்க ஈயாகக்கீழே விழுந்தது.

இப்பொழுது உன் தோட்டத்திலுள்ள நதியில் போய் ஸ்நானஞ்செய்து ஒருமண்பாத்திரத்தில் தண்ணீர்எடுத்து வந்து மனச் சுத்தத்தோடு தங்கமாக மாறறப்பட்ட வஸ்துக் கள்மேல் தெளித்தாலும் அது உடனே தன்னுடையசுயரூபத்தை யடையும்" என்றான்.

மகிபாலன் தலையை தொங்கப்போட்டு நமஸ்கரித்தான். பிறகு அந்த உருவத்தைக் காணவில்லை.

மகிபாலன் வெகு பரபரப்புடன்ஒருமண்பாண்டத்தைஎடுத தான். அது உடனே தங்கப் பாண்டமாக மாறிவிட்டது. அதை எடுத்துக்கொண்டு நதிக்கரைக்கு ஓடினான். போகும்பொழுது இவன் மேற்பட்ட இலைகள் தங்கமாகமாறிவிட்டன. நதிக் கரைக்குப்போய் வெகு அவசரமாக நதியில் விழுந்தான், பிறகு அப்பாத்திரத்தில் நதியினின்று ஜலம் எடுத்தான். அது உடனே மண்பாண்டமாக மகிபாலன் ஸந்தோஷத்தால் குதித்தான். அவனுடைய ஹிருதயம்தங்கமாக மாறிக்கொண்டு கல்லாய் இருந்தது இப்பொழுது ஸநானம் செய்தவுடன் அதுபோய்விட்டது.

மகிபாலன் தன்விரலால் ஒரு இலையைத் தொட்டான். அது தங்கமாக மாறுதிருக்கக்கண்டு களித்தான். பிறகு அரண்மனைக்கு ஓடித்தன் பெண்மேல ஜலத்தைத் தெளித்தான். அவனுடைய பெண் உடனே ஏனப்பா! என்மேல் ஜலத்தைக் கொட்டுகிறாய் என மறுபடியும் மகிபாலன் நீரைத்தெளித்துக் கொண்டேயிருந்தான். இராசசேகரிதான் ஒரு சிறியவிக்கிரகமாக விருந்ததையறியாள். தன்னுடைய தகப்பனுரை கட்டிக்கொள்ள போனதுமுதல் என்ன நடந்தது என்று தெரியாது.

மகிபாலன் தன்னுடைய மட்டாள் தனத்தை இராஜசேகரிக்குச் சொல்லவில்லை, ஆனல் தான் புத்திசாலியாகி விட்டோம் என்றுகாண்பிப்பதற்காக அவளைத் தோட்டத்திற்கு அழைத்துச் சென்று ஒவ்வொரு ரோஜாவிலும் ஜலத்தை தெளித்தான். எல்லாம் வாசனையுள்ள புஷ்பங்களாயின.

இப்பொன் வரத்தை எப்பொழுதும் அவன் ஞாபகத்தில்வைக்க இரண்டு அடையாளங்கள் இருந்தன. ஒன்று ஆற்றங்கரையிலுள்ள மணல் தங்கம்போல் ஜ்வலித்தது இரண்டாவது இராசசேகரியினுடைய தலை மயிர் தங்கம்போல் பளபளத்தது.

மகிபாலன் கிழவனயிருக்கும்போது தன் பேரக்குழந்தைகளைத்தாவ எடுத்து வைத்துக்கொண்டு சந்தோஷமாயிருக்கும் பொழுது அக்குழந்தைகளுக்கு இக்கதையைச்சொல்வான்.

C. நடேசன்.

புத்தகவரவு

பூர்ணசந்திரோதயம்.

இப்பத்திரிகையின் தைமாதச் சஞ்சிகை கிடைக்கப்பெற்று மகிழ்ந்தோம். இதில் ஸன்மார்க்க முறையும் ஸம்ஸாரியும்,

காயத்ரி ராமாயணம், வி-கிருஷ்சாமி ஐயரின் சரித்திரச்சுருக்கம் (பாட்டில்) முதலிய அருமைவாய்ந்தவிஷயங்கள் வெளியிடப்பட்டிருக்கின்றன.

கதாமஞ்சரீ.

இப்பெயருள்ள ஒரு மாதாந்த ஸஞ்சிகையின் முதல் ஸஞ்சிகை நமக்கு வரப்பெற்று மிகவும் ஸந்தோஷமடைந்தோம். இப்போது காலவசத்தால் சுமார் பத்துவருஷங்களுக்குட்பட்டு மிகவும் ஏராளமான கற்பிதக்கதைகள் வெளிவந்து குவிந்துகிடப்பதையறியாதார் ஒருவருமில்லை. இக்கதைகளில் தற்காலம் நமது பழக்கத்திற்குட்பட்டு நம்மவரெல்லாருக்கும் மிகவும் சாதாரணமாயிருக்கும் விஷயங்களே வர்ணிக்கப்பட்டிருக்கின்றன உதாரணமாக ஸ்திரீபுருஷஸம்வாதம், கல்யாண ஏற்பாடுகள் அவைகளுக்கு இடையூறுகள் கோட்டாடுகள், கோர்ட்டுவிசாரணை, ஜெயில், போலீஸ், மோட்டார் வண்டிகள், ஸைகில்கள், காபிஹோட்டல், மின்சாரவிளக்குகள், விவசாரம், புகைச்சுருட்டுப்பற்றவைத்தல் ஆகிய இம்மாதிரியான விஷயங்களும் விதவாவிவாஹம் முதலான நவீன பரிஷ்காரங்களுக்கேற்ற விஷயங்களுமே அதிகமாய் விஸ்தரிக்கப்பட்டிருக்கின்றன. இவைகளை நாம் அனுபவத்திலிருந்தே நன்றாகத்தெரிந்து கொள்ளக்கூடும். ஆனால் ஆர்யமதாசாரம், ஈஸ்வரபக்தி, ஸ்வதர்மம் ஆகிய விஷயங்களை நாம் இவைகளிலிருந்து தெரிந்துகொள்ள அநேகமாய் இடமில்லை. முற்றிலும் நாவல்களெல்லாம் இம்மாதிரியானவையென்று நாம் சொல்லிவிடவில்லை. அவைகளிலும் சில நல்லதத்வார்த்தத்தை விளக்கக்கூடியவைகளாக ஸ்ரீ குருஸ்வாமி சர்மா ஸ்ரீராஜம் அய்யர் முத

லானமகான்களால் இயற்றப்பட்டு மிகவும் பிரஸித்தமாயிருக்கின்றன. புராணம் முதலிய அநேக கிரந்தங்களும் அதற்குப் பின்னிட்ட அநேகம் நூல்களும் காலவசத்தால் ஏதோ ஒரு மூலையில் ஒளிந்துகொண்டு வெளிவராமலேயிருக்கின்றன. இப்படிப்பட்ட ஸத்கிரந்தங்களில் கதாசரித்சாகரமும் ஒன்று. இது நமது இந்தியாவில் காஷ்மீர தேசத்தில் ஸ்ரீ ஹர்ஷன் என்னுமோரரசன் சுமார் 800 வருஷங்களுக்கு முன் அரசாண்டகாலத்தில் அவன் சத்துருக்களால் எதிர்க்கப்பட்டு யுத்தத்தில்மாள, இதைக்கேட்ட அவ்வரசன் தாயாகிய ஸுபிர்யவதி என்பவள் புத்திரசோகத்தால் வருந்த அவளது மனக்கவலையை மாற்றக்கருதி ஸோமதேவர் என்னும் வித்வான் இந்தகிரந்தத்தை எழுதினர். இதில் பக்தி ஞானம் ஸத்துக்களின் லக்ஷணம் ஆகிய அநேகம் சிலாக்கியமான விஷயங்கள் வர்ணிக்கப்பட்டிருக்கின்றன. இவ்வருமையான புஸ்தகம் இவ்வளவுநாளாய் ஸம்ஸ்கிருத வித்வான்களுக்கும் தெரியாமலிருந்து இப்போதுதான் நிர்ணயஸாகர அச்சுக்கூடத்தில் வெளிப்பட்டு மிகவும் பிரஸித்தமாயிருக்கிறது. இதைத் தமிழ் அறிந்த எல்லாரும் மிகவும் ஸாதாரணமாய்க்கையாளும்படி செய்ய வேண்டுமென்று உத்தேசித்து திருவல்லிக்கேணி, அம்பா விலாசபுத்தகசாலையதிபர் ம-ா-ா-ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தி சாஸ்திரியாரவர்கள் "கதாமஞ்ஜரி" என்னும் பெயருள்ள மாதாந்தப் பத்திரிகை மூலமாய் பிரசுரஞ்செய்ய ஆரம்பித்திருக்கிறார்கள் இது பணச்செலவுள்ள காரியமாதலால் நமது ஆர்யர்களின் திரவ்யஸஹாயத்தை எதிர் பார்த்துக்கொண்டே மாதம்கொஞ்சமாக வெளியிட வேண்டுமென்பது அவர்களின் உத்தேசம். இந்த கிரந்தம் ஈச்வரகடாக்ஷத்தினாலும்நம்மவர்களின் உதார

மான ஸஹாயத்தினுலும் முடிவுபெற்றவுடன் இன்னும் இந்த மாதிரியான அநேக அபூர்வகிரந்தங்களை இப்பத்திரிகையின் முகமாய் வெளிக்குக்கொண்டுவர நமது சாஸ்திரிகளவர்கள் தீர்மானித்திருக்கிறதாகத் தெரிகிறது. இப்பத்திரிகை மாதந் தோறும் டிம்மியளவில் 3 பாரங்கள் (24பக்கங்கள்) கொண்ட சஞ்சிகையாக வெளிவரும். இதற்கு சந்தாவும்வெகுஸ்வல்பமாக வருஷம் ஒன்றுக்கு தபாற் கூலியுள்பட ரூபாய் ஒன்று என்றே ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.

N. ராமநாத சாஸ்திரி,
அடையார் லைப்ரெரி, பண்டிதர்,
மைலாப்பூர்.

பழமொழிகள்.

1. அகப்பைக்குத்தெரியுமா அடிசிலின் சுவை?
2. எட்டாப்பழத்துக்குக்கொட்டாவிவிட்டென் செய்வது ?
3. பெற்றமனம் பித்துபிள்ளை மனம் கல்லு ?
4. யானை யிருந்தாலும் ஆயிரம் பொன் இறந்தாலும் ஆயிரம் பொன் ?
5. உரத்து உரத்துக் கத்தினுலும் ஊர்க்குருவி பருந்தாகுமோ ?
6. கடுகு சிறுத்தாலும் காரம்போகுமோ ?
7. வல்லான் வகுத்ததே வழி ?
8. ஆலையில்லா ஊருக்கு இலுப்பைப்பூச் சர்க்கரை ?

பெருமை பொருந்திய மகாராஜாசக்ரவர்த்தி அவர்களின்
மகுடாபிஷேக மகோற்சவம் கொண்டாடினதை
அவர்களுடைய இராஜ்ஜியங்களுக்குள்
பிரசித்தப்படுத்துவதற்காக
மகாராஜா சக்ரவர்த்தி அவர்களால் வெளியிடப்பட்ட

இராஜ விளம்பரம்.

ஜார்ஜ் மகாராஜா சக்ரவர்த்தி அவர்கள்.

நமது அரசாட்சியின் முதல் வருஷமாகிய நமது கர்த்தருடைய ஆயிரத்துத் தொள்ளாயிரத்துப் பத்தாம் வருஷம் ஜூலை மாதம் பத்தொன்பதாம் தேதியும் நவம்பர் மாதம் ஏழாம் தேதியுமுள்ள நம்முடைய இராஜ விளம்பரங்களினாலே, ஆயிரத்துத் தொள்ளாயிரத்துப் பதினோராம் வருஷம் ஜூன் மாதம் இருபத்திரண்டாம் தேதியில் நமது இராஜ மகுடாபிஷேக மகோற்சவத்தை சர்வசக்தியுள்ள கடவுள் கிருபையினாலும் ஆசீர்வாதத்தினாலும் கொண்டாடவேண்டுமென்னும் நமது இராஜ உத்தேசத்தை நாம் பிரசித்தப்படுத்தி அறிவித்தபடியாலும்;

நமது அரசாட்சியின் முன் வருஷமாகிய நமது கர்த்தருடைய ஆயிரத்துத் தொள்ளாயிரத்துப் பதினோராம் வருஷம் மார்ச்சு மாதம் இருபத்திரண்டாம் தேதியுள்ள நம்முடைய இராஜ விளம்பரத்தினாலே, மேற்படி மகோற்சவமானது அந்தப்படி கொண்டாடப்பட்டதென்று நம்முடைய இந்திய இராஜ்ஜியங்களுக்குள் நம்மிடத்தில் அன்புபாராட்டும் எல்லாக் குடிஜனங்களுக்கும் நாமே நேரில் பிரசித்தப்படுத்துவதும், நம்முடைய கவர்னர்களையும், லெப்டெனென்ட் கவர்னர்களையும், நம்முடைய மற்ற உத்தியோகஸ்தர்களையும், நமது சம்ரக்ஷணையிலிருக்கும் சுதேச இராஜ்ஜியங்களின் அரசர்களையும், அதிபதிகளையும், பிரபுக்களையும், இந்திய ராஜ்ஜியத்தைச்சேர்ந்த சகல

காரணங்களின் அரசர்களையும் பிரதிநிதிகளையும் நமது சந்நிதானத்துக்கு வரவழைப்பதும் நம்முடைய கோரிக்கையென்றும் விருப்பமென்றும் நாம் தெரிவித்தபடியாலும்;

நமது இந்த இராஜ விளம்பரத்தினுல் நாம் இப்போது அதைப் பிரசித்தஞ்செய்து, நம்முடைய சகல உத்தியோகஸ்தர்களுக்கும் இப்போது டெல்லியில் கூடியிருக்கும் சகல அரசர்களுக்கும் அதிபதிகளுக்கும் பலவகையான ஜனங்களுக்கும் நாம் மகாராஜாவாகவும் சக்கவர்த்தியாகவும் வாழ்த்துக்கூறி, நமது இந்திய இராஜ்யத்தில் நாம் ஆழ்ந்த அன்பு வைத்திருப்பதையும், அதன் க்ஷேமத்திலும் அபிவிருத்தியிலும் நாம் இடைவிடாமல் அக்கரை கொண்டவர்களாயிருப்பதையும், இனி எப்போதும் அப்படியே இருந்துவருவதையும் அவர்களுக்கு உறுதியாய்ச் சொல்லுகிறோம்.

டெல்லியில் நமது இராஜசபையிலே நமது அரசாட்சியின் இரண்டாவது வருஷமாகிய ஆயிரத்துத் தொள்ளாயிரத்துப் பதினோராம் வருஷம் டிஸெம்பர் மாதம் பன்னிரண்டாம் தேதியில் கொடுக்கப்பட்டது.

மகாராஜா சக்ரவர்த்தி அவர்களைக் கடவுள் ரக்ஷிப்பாராக!

இந்தியா சக்ரவர்த்தி.

ராஜா, மஹாராஜா, சக்ரவர்த்தியென்னும் பதங்கள் பூமியையாளுபவர்களுக்கு உரித்தான பெயர்கள். இவைகளில் முறையே ஒன்றைவிட ஒன்று கௌரவமுள்ளது. ஜனங்களின் மனதைச் சந்தோஷப்படுத்துகிறவனுக்கு ராஜா என்னும் பெயர்பொருந்தும். இத்துள் அதிகமான பூமிக்கு அதிபதியாகவும் அவனுக்குட்பல சிற்றரசர்களும் இருக்க அரசாள்பவன் மஹாராஜா எனப்படுவான். அகண்டபூமண்டலத்திற்கும் ஒரே அரசனுக உள்ளவன்

சக்ரவர்த்தியென்னும் பெயர் அடையும் பாக்கியம் பெறுவான். இப்பெயர்களெல்லாம் ஸம்ஸ்கிருத பாஷையிலுள்ளவைகளே.

சென்ற 1911-ம் ஞூ டிசம்பர்மீ 12-உ மங்களவாரம் 12-மணிக்கு நமது மேரிசக்ரவர்த்தினியுடன் கூடிய நம் ஜார்ஜ் மஹாராஜா சக்ரவர்த்தியவர்களுக்கு டில்லிமாநகரின் நண் மகுடஞ் சூட்டப்பட்ட தென்பதை நேரில் பார்க்கும் பாக்கியத்தை நாம் கொடுத்து வைக்காவிடினும் பத்திரிகைகள் மூலமாகப் படித்துச் சந்தோஷமடைந்தோம்.

நமது இந்தியாசக்ரவர்த்தியார் நம்மிடத்தில் பரிபூரணவிசுவாசம் வைத்திருக்கிறார் என்பதைக் கேட்டும்படித்துப்பார்த்தும் நமக்கு இன்னும் அதிகமானசந்தோஷமுண்டாகிறது. இவருக்கு மஹாராஜாவென்னும் பதமும் இந்தியா சக்ரவர்த்தி யென்பதும் நன்றாகப் பொருந்தும். இவரைப்போல் இந்திய ப்ரஜைகளிடத்தில் அபிமானமுள்ள அரசர் நமக்குக் கிடைப்பதருமை இவர்களுடைய ராஜ்யபாரத்தில் நாம் பல நன்மைகளையடைால மென்ற நம்பிக்கை ஒவ்வொரு இந்தியரின் மனதிலும் இருக்கும் என்பதிலையமில்லை.

அடியில் வரும் ஒருவிசேஷத்தால் தமது குடிகளிடத்திலுள்ள அன்பையும் நம்பிக்கையையும் நன்றாக நமது சக்ரவத்தி வெளியிட்டிருக்கிறார்கள்.

டெல்லியில்நமதுசக்ரவர்த்திபட்டணப்ரவேசம்வரும்போது ஜனங்கள் திரளாகக்கூடியிருந்தார்கள். இச்சமயம்பார்த்தால்தான் பார்க்கமுடியுமானதால் அரசரைப் பார்க்கவேண்டு மென்னும் ஆசையால் இப்பாமர ஜனங்கள் நெருங்கி வரவே, அவ்விடத்திலுள்ள சிப்பாய்கள் ஜனங்களைப்புடைத்துத் தள்ளினார்கள். இதைக்கண்ட நமது அரசர் "நமதுசமீபத்தில் எவ்வளவு வேணுமானாலும் ஜனங்கள் நெருங்கிவந்து பார்க்கட்டும்" என்று கட்டளையிடவே அப்பொழுது "நான் தங்களைப்பார்க்கும் வரை

யில் இவ்விடத்திலேயே நிற்கவேண்டும்" என்று ஒருசத்தம் கிளம்பவே உடனே நமதுமன்னர் நின்று விட்டாராம். இதைக் கேள்விப்படும் எவர் தான் நமது அரசரிடத்து மனமுருகார். நாமெல்லோரும் நமது சக்ரவர்த்தி யவர்கள் இந்தியாவை நீதிமார்க்கமாகப் பரிபாலிக்குமாறு ஜகதீசனை யனுதினம் தியானிப்போமாக!

எஸ். ராஜா சாஸ்திரி.

ராஜதம்பதிகள்

பம்பாய் விஜயம்.

இம்மாதம் 10-ந் தேதி காலை 11-30 மணிக்குச் சரியாக வைசியராய் பம்பாய் வந்து விக்டோரியா டெர்மின்ஸ்ஸி லிறங்கினர். அவரைப் பம்பாய்க் கவர்னர் வரவேற்றனர். அங்கு ராஜதம்பதிகள் தமது பரிவாரங்களுடன் 12 மணிக்குச் சரியாக வந்திறங்கினர்கள். அவர்களை வைசிராயும், பம்பாய்க் கவர்னரும் பிரமுகர்கள் பலரும் காத்திருந்து நல்வரவேற்றனர். அங்கிருந்து ஒரு மைல்நீளமாக ஊர்கோலம் புறப்பட்டுமெதுவாகச் சென்றது. தற்காப்புச்சைந்நியங்கள் ராஜதம்பதிகள் செல்லும் வண்டிக்கு முன்னும் பின்னுமாகச் சென்றன.

சக்ரவர்த்தியா ரளித்த உருக்கமும்
அன்பும் நிறைந்த விடை.

பம்பாய் ராஜதானி ஜனங்களுக்காக நீங்கள் சமர்ப்பிக்கும் அன்பும் உதாரமுமமைந்த பிரிவு உபசாரப்பத்திரத்திற்கு நான் சக்ரவர்த்தினிக்காகவும் எனக்காகவும் மனப்பூர்வகமான வந்தனமளிக்கின்றேன்.

உங்களுடைய பிரதான நகருக்கு நாங்கள் வந்தபோது நீங்கள் எங்களை மனப்பூர்வகமாக வரவேற்ற உபசாரம், சென்ற 5 வாரங்களாக நாங்கள் சென்ற விடங்களிலெல்லாம் எங்களுக்கு அன்புகூர்ந்து காட்டப்பட்ட பத்தி விசுவாசத்திற்குத் தொடக்கமாக விருந்தது; இப்போது நீங்கள் கடவுளருளை முன்னிட்டு எங்களுக்கு வழிவிடும் பிரிவோபசார வார்த்தைகளைத் திருப்தியுடனும் துக்கத்துடனும் கேட்டோம்.

எங்களுடைய இந்தியாவின் விஜயம், இந்தியாவிற்கு நற்பலனை யளிக்குமென்று நீங்கள், எதிர்பார்த்திருந்த நோக்கம் நாங்கள் கொண்டிருந்த உண்மையான விருப்பத்தை முற்றுப் பெறச் செய்ததால் எங்களுடைய நன்றியறிதலை யூர்ஜ்ஜிதப் படுத்துகின்றது. இந்தியாவில் என்னுடைய விசுவாசமுள்ள பிரஜைகளின் மத்தியில் இன்னொருமுறை நான் வந்திருப்பது எனக்கு எல்லையற்ற சந்தோஷத்தை யுண்டாக்கியது. எங்களுக்குச் சனங்கள் காட்டும் உண்மையான அன்பிற்கும் விசுவாசத்திற்கும சக்ரவர்த்தினியாரும் நானும் சொல்லுக்கடங்காத சுக நிகழ்ச்சி பெற்றிருக்கின்றனம்; அவ்வன்பும் விசுவாசமும் ஜனங்களுடைய சித்தத்திற் குடிகொண்டிருக்கின்றனவென்றும் நாங்கள் காண்கின்றோம்.

சென்ற 5 வாரங்களாக நாங்கள் சந்தோஷமாக விருந்தும் இத்தேசத்தில் இன்னும் சிலநாளிருந்து பழமையான சென்னையையும், எங்களுக் குபசாரஞ் செய்யச் சித்தமாயிருந்த அரசர்களின் சமஸ்தானங்களையும் போய்ப் பார்க்கச் சக்தியற்றவர்களாயிருந்தோ மென்னுங் குறையொன்றே யெங்களுக்கு வியசனமாயிருக்கின்றது.

யோசனையோடுகூடிய ஜாக்கிரதையாலும் அன்போடுகூடிய விசுவாசத்தாலும் எங்களுக்கொருவாற்றாலும் குறையுண்டாகாமற் செய்து சந்தோஷத்தை விளைவித்த அநுபவங்களின்ஸ்மிருதி நெடுங்கால மிருக்குமாறு இந்துதேசத்தின் கடற்கரையைவிட்டுப்

போகின்றோம். நமது விஜயம் கடவுளருளால் இப்பெரிய தேசத்தாருக்கும் பொதுநன்மையைப் பயப்பிக்குமென்று நம்புகிறோம். இவ்வுலகத்தில் இதரதேசங்களிலுள்ள என்னுடைய பிரஜைகளின் உரிமைகளையும் சுகக்ஷேமத்தையும் நோக்குவது என்னுடைய அத்தியந்தப் பிரியமாயிருப்பதுபோலவே, இந்துதேசப் பிரஜைகளின் உரிமையையும் சுகக்ஷேமத்தையும் நோக்குவது என்னுடைய அத்தியந்தப் பிரியமாயிருக்கும்.

எல்லாச் சாதிமதத்தினரும் ஒருங்குகூடி எங்கும் எங்கட்கு அத்தியந்த விசுவாசத்துடன் உபசாரமளித்ததை நோக்க எனக்குத் திருப்திகரமாயிருக்கின்றது இந்த வொற்றுமையும் ஏக சித்தமும் உங்களுடைய தனிக்காரியங்களிலும் பொதுக்காரியங்களிலும் சர்வசாதாரணமாக நிகழுவது சாத்தியமல்லவா?

மானிட மாக்ஷிமையின் அநித்தியம்.

நாம் எல்லோரும் சரித்திரங்கள் படித்திருக்கின்றோம். சிறந்த, உயர்ந்த மகாமேன்மையான மனிதர்களைப் பற்றி படிக்கும் தருணம் கடைசியில் நம் கண்களுக்குப் புலப்படுகின்றன யாவை? புராதனகாலத்தில் கீர்த்திபெற்றிருந்த ராமன், ராவணன், பாண்டவர்கள் சில நூற்றாண்டுகளுக்கு முன் தான் வாழ்ந்து கொண்டிருந்த விக்ரமாதித்யன் அவனிலும் சிறந்த காளிதாசன் இவர்களைப் பற்றிப் படித்து முடியுங்கால், பிறகு அவர் இறந்தார், என்னும் வார்த்தைகளையே காண்கிறோம்.

சிலர் கீர்த்தியின் கரங்களில் படுத்துறங்குகிறார்கள், சிலர் தங்கள் தேசத்தைக் காக்கச்சண்டைசெய்கையில் இறந்திருக்கிறார்கள்; சிலர் துன்பங்களில் மூழ்கி அந்தியகாலத்தில் சுகமின்றி இறந்திருக்கிறார்கள். சிலர் இங்கே- சிலர் அங்கே- ஆண்மையுள்ள

வன், கீர்த்தியுடையவன், இழிமகன், இளநெஞ்சன், சூரன், நீசன், இவர்களின் சாம்பல்களெல்லாம் ஒன்றாய்க் குவிக்கப்பட்டிருக்கின்றன— எல்லாரும் நம்மால் சிந்திக்கப்படாமல், இவ்வுலகத்தின் பாழ்களுடன் பாழாக விழுந்திருக்கிறார்கள்,

இப்பொழுது குடியானவர்கள் நிலங்களை உழும்பொழுதும் கூலியாட்கள் பள்ளம் பறிக்கும் பொழுதும் கணக்கிடக்கூடாத எத்தனை ஆயிரம் வீரர்களின் சாம்பல்களும் எலும்புகளும் தோண்டி எடுக்கப்படுகின்றன!! எடுத்து எவ்வளவு இழிவாய் நடத்தப் படுகின்றன.

நம் முன்னோர்களின் எலும்புகளைப் பொசுக்கி, சுண்ணும் பாக்குகிறோம். அச்சுண்ணும்பினால் வீடுகட்டுகிறோம், கோவிலும் கட்டுகிறோம்!! நம் நாய்க்குட்டிகளிருக்க அறையும் கட்டவில்லையா?

முன்னோர்களுள் சிலரின் பெயர்களை சாஸ்வதமாக்கும் பொருட்டு, ஏற்படுத்திய ஞாபகஸ்தம்பம், கல்லறை, எல்லாம் நாசமடைந்து மண்ணுடன் மண்ணாய்க் கலந்து விட்டன. அவர்கள் வாழ்ந்த இடமே நமக்குத் தெரியவில்லை. அவர்களைப்பற்றி நாம் அதிகம் அறியவேண்டுமானால் மற்றவர்கள் தங்களிஷ்டப்படி எழுதி வைத்திருக்கும் சரித்திரங்களைத் தான் படிக்கவேண்டும்.

சிலர் நீடூழி வாழ்ந்திருக்கிறார்கள். அவர்களைப்பற்றி இப்பொழுது நமக்கு என்ன நிச்சயமாய்த் தெரியும். இறந்துவிட்டார்கள் என்பதேயாம். இவ்வுலகத்தின் மகிமையும் கீர்த்தியும் இவ்வளவே! அப்படியானால் நம் வாழ்நாளின் காரியமென்ன? நம்மால் வீரனென்றும் சூரனென்றும் உயர்த்திப் பேசப்படும் மாக்ஷிமை பொருந்தியவர்களின் தொழிலென்ன? நம்மால் புகழப்படுவதும் தங்களைப்பற்றி சரித்திரங்களில் அநேகம் எடுகள் எழுதப்படுவதும் தானா? அந்தோ! அப்படி எழுதும் புரா

ணங்களெல்லாம் காலம் செல்லச் செல்லக் கதைகள், கட்டுக்கதைகள் ஆகிவிடுகின்றனவே! அல்லது, எந்நாளும் அழியாத வெண்பாக்களில் நம்மைப் புகழ்ந்து கவிகள்எழுதவா? இப்படி நம்மைப் பற்றிக் கவிகளில் புகழ்ந்திருந்தால் பிறகு பிச்சைக்காரர்கள் தங்கிஷ்டப்படி அப்பாடல்களைத் திருப்பித் திருப்பித் தெரு மூலைகளில் பிச்சை கேட்கும்பொழுது பாடவும், அங்கு கூட்டம் சேர்ந்து திருடர்களுக்கும், முடிச்சுக்கத்திரிகளுக்கும் தங்கள் வேலையைக் காட்ட இடமும் கொடுக்குமல்லவா? அல்லது பக்தி புண்ணியம் இவைகளால் தங்கள் பெயரை பெருந்தன்மையுள்ளதாக்கி, மோக்ஷமடையும் மார்க்கத்தைத் தேடுவதா? பக்தியற்றவன் எவ்வளவு பெரியவனாயினும் மிருகத்திற்குச் சமானம். இப்படி பக்தியும், தர்மமும் உடையவர்களைக் கணக்கிட்டால் பெரியவர் மகாபெரியவர் என்று நம்மால் புகழப்படுவருள் எத்தனைபேர் கணக்கில் வருவார்கள்? வெகு சிலரே என்பதற்கு ஐயமில்லை.

T. M. R.

அம்பர் அல்லது நிமிளை.

புராதனகாலந்தொட்டு அறிந்து மதிக்கப்பட்ட இவ்வஸ்துவுக்கு அநேகபாஷைகளில் பெயருண்டு, சுமார் 2000- வருஷங்களுக்கு முன்னே தத்திவ சாஸ்திரியாகிய பிளினி (Pliny) என்பவர் அம்பர் இப்போது நிர்மூலமாய்ப் போனதும் குவிந்த வடிவுள்ள கனி காய்த்ததுமான ஒரு மரத்தின் நிறவஸ்துவான பிசின் என்று எதிமூவைத்தார். தற்கால சாஸ்திரமும் இதற்கு அதிகமாய் ஒன்றும் சொல்லிக்கொள்ளமாட்டாது. அமெரிக்க சாஸ்திராபிவிர்த்தி சங்கத்தின் கடைசியான கூட்டத்தில் அரங்கேற்றிய ஒரு பத்திரி

கையில் ஸ்மித் (Smith) என்னப்பட்ட அமெரிக்க துரைமகன் இவ்விஷயத்தின்பேரில் அறையப்பட்டிருப்பதை எல்லாம் சங்கிரகித்துக் காட்டுகிறுர். அவாவது:— அம்பர் விளைவிக்கிற புராதன வனம் ஹொல்லாந்து முதல் ஜர்மானிய கரைநெடுக, சிபேரியா கம்ஸ்கட்கா பிரதேசங்களினூடு வட அமெரிக்காவரைக்கும் விசாலித்திருந்ததாம். சிமிளைப் புதையல்களில் அதிபிரபலியப்பட்ட ஒன்று பால்த்திக் கடலினுல் சூழப்பட்ட புருஷியாவின் அம்ஸமாகிய சம்லாந்து (Samland) துவீபத்தில் இருக்கிறது. இப்பிரதேசத்தின் வடபகுதி மேட்டுப்பாங்கும் கடலோரத்துக் கரைகள் 130 முதல் 300-அடி வரைக்கும் உயர்ந்ததுமாம். ஒரு காலத்தில் இவ்விடத்தில் காணப்பட்ட அம்பர்யாவும், கிருஷிகர் நிலம் உழும்போது அகப்பட்டது முதலாய்ஜர்மானிய அரசாட்சியாருக்கே ஆதீனம். கண்டெடுக்கிறவனுக்குக் கிரயத்தில் பத்திலொரு பாகமேகிடைக்கும். இப்போதுபர்லின் நகரத்து நூதனசிரயத்தில்வைத்திருக்கும் 18 ராத்தல் எடையுள்ள கட்டிஒன்றுக்காக அதை எடுத்தவனுக்கு ஆயிரம் டாலர்கொடுக்கப்பட்டதாம். மழைப்புசலுள்ள காலத்தில்காற்றும் அலைகளும் கரையிலே வலுவாய் மோதியடிக்கும்போது, அமோகமாக சிமிளை தண்ணீரினுல் அலசுண்டு வெளிப்படும். ஆகிலும் வருஷாந்தர விளைவு கண்டமட்டில் வரவரக் குறைவுபடுகின்றதினுல், அம்பர் விலை ஒன்றுக்கொன்று உயருகிறது. முன்னெருகாலத்தில் கழி முகங்களின் கரைகளாயிருந்த பசிய மணலத்தேரிகளில் அம்பர்விளையும் மரங்கள் செழித்திருக்கும் என்றுகோனிக்ஸ்புர்க் நகரத்தின்(Konigsburg) சடேக் வித்வான் (Professor Zaddech) அனுமானிக்கிறுர். அம்பர் விளைகிற அடுக்குப்பாருக்கு நேர்மேலே கபில நிறமான நிலக்கரிப்படைகள் பொறுத்திருக்கிறது. அவைகளில் காணப்படும் நிரசப்பூண்டுகள் அம்பர் விளையும் பாரிலுள்ள தாவரங்களுக்கு முற்றிலும் விகற்பமானவைகள். சிமிளைக்குள்ளே அநேக பூச்சிகளும் செடிகளும் சேமிக்கப்பட்டிருக்கிறதுண்டு. முந்தினவைகளில் 800 வர்க்கங்களும், பிந்தினவைகளில் 160

வர்க்கங்களும் பெயர் சொல்லப்பட்டிருக்கின்றன. அம்பர் சேர்க்கப்பட்ட பின்பு வியாபார இதங்களுக்காக அது பற்பல மாதிரிகளாய் வகுக்கப்படுகிறது. அது மேல்தரமான துண்டுகள் கௌனஸ்ந்தீன் புரிக்குப்பெரும்படியாய் அனுப்பப்பட்டு, சுங்கான் குழாய்களின் வாய்ப்பிடிகளுக்காக அங்கே அதிகமாய்உபயோகப்படுகின்றன. சிற்றளவான துணிக்கைகளோ பவளமணிகள் முதலியவைஉண்டாக்க உதவுகிறது. அசடுள்ள துண்டுத் துணிகளை ஒருவித அமிலம் செய்யவும் அம்பர் மெருகெண்ணெய் பாகம் பண்ணவும் கையாடுவார்கள். நிமிளையானது மிகுந்த வயிரத் தன்மையினாலும் முறியுந்தன்மை குறைந்திருப்பதினாலும் உருக்குவதற்கு அதிக காந்தி வேண்டியிருப்பதினாலும் மின்சார சக்தி கதித்திருப்பதினாலும் ஏனைப் பிசின் வகைகளிலிருந்து வித்தியாசமாய் அறியப்படுகிறது. சிறுபான்மையாய் வெப்பமேறினால் அது மிகவும் வளையுந்தன்மையுள்ளதாகும். அம்பர் சடையாய் கூட்டின கள்ளச்சரக்குகளும் ஏராளம். ஆகிலும் மின்சார சூத்திரத்தினால் அவைகளைப் பரீட்சித்தறியலாம். நிமிளையின் சாதாரண நிறம் மஞ்சளாயினும், துய்ய வெள்ளை முதல் கறுப்பு ஈறான சகல வர்ணங்களிலும் அது காணப்படுகிறது.

காவலாளும் வேவாளும்.

ஒரு கோட்டையைக் கைக்கொள்ள விரும்பின சத்துரு அதில் உட்புகத்தகும் இடவைவை உய்த்துணர்ந்து வரத் திறமையான தூதாள் ஒருவனை அனுப்ப, அவன் அக்கோட்டையைக் காவல்செய்தோனிடம் வந்து, கள்ளம் கபடம் ஒன்றும் எண்ணாத அப்பாவிபோல பாவித்து நின்றான். காவலாள் அவனைக் கண்ணுற்றபோது, அவன்பேரில் யாதாமொரு

அக்கியானம் கொள்வதற்கு ஏதுவில்லை என்றாலும், காவலாள் மிகவும் சாவதானமாயிருந்து, கோட்டைக்கு அபத்தமாய் நேரும் வாய்ப் பிறப்பு ஒன்றுக்கும் இடங்கொடுக்கப்படாதென்று நிர்ணயித்துக்கொண்டான். அப்போது வேவாள் அவனை நோக்கி "அய்யா! நீர் காவலிருக்கிறீரோ? கோட்டை காக்கிறதில் எவ்வளவோ பதனமாய் இருக்கவேண்டும்!," என்க, காவலாள் "ஆம், ஆம்" என்று பதில் உரைக்க, வேவாள், "உமக்குத்தைரியமும் விழிப்பும் உள்ள கூட்டாளிகள் உண்டா!" என்று, வினவ, காவலாள் "ஆம், ஆம்" என்று மறுமொழி கொடுக்க; வேவாள் "இந்த உஷ்ணவேளையில் உமக்குத் தாகம் அதிகமாயிருக்குமே;" என்ன, காவலாள் "ஆம், ஆம்" என்றுபதில் சொல்ல; வேவாள் "உம்மைப் பார்க்க எனக்கு வெகு பரிதாபமாய் இருக்கிறது. இதோ இந்தக்குப்பியில் இருக்கிற பானத்தைச் சாப்பிடும். அது உமக்கு வெகு சௌக்கியமாயிருக்கும்" என்று சொல்லி, தன் கைவசம் இருந்த குப்பியை அவனுக்கு நீட்டினான். காவலாள் தாகத்துக்கு வாங்கிச்சாப்பிடுவதினால் கோட்டைக்குக் கெடுதி என்ன என்று நினைத்துக்கொண்டு, குப்பியை வாங்கி வாயில் வைத்துப் பார்த்து பானம் வெகு மதுரமாய் இருக்கக்கண்டு, முழுதும் உறிந்துவிட்டான்.

வேவாள் உடனே விலகிப்போக, காவலாள் தோக்கையும் தூக்கித் தோளில் வைத்துக்கொண்டு, வழக்கப்படி வாசலுக்கு முன்னாலே மாறி மாறி லாத்துப்போட்டான். கொஞ்சநேரம் செல்லவே, அவன் தலை கிறங்கி மயக்கங்கொண்டு, தூக்கம் பிடித்துக் கீழே விழுந்தான். பானத்தின் மஸ்தேறி அவன் தலை மறந்து ஒன்றும் அறியாமற்போனான். வேவாளோ சம்பவித்தது இன்னது என்று நன்குமதித்து, தன் கூட்டாளிகள் எல்லாரையும் சேர்த்துக்கொண்டுவர, அவர்கள் தீவிரத்திலே கோட்டையைச் சேர்ந்து, வெறித்துக்கிடந்த காவலாளையும் நெஞ்சுக் குற்றுயிர் குற்றி, காப்புச் சேனைக்கும் தெரியாமல்கோட்டைக்குள் சென்று,

உள்ளிருந்த சகலரையும் கொலைக்கும் சிறைக்கும் உள்ளாக்கினார்கள்.

நம்மைப் பாவத்துக்கு உட்படுத்தும் முதற்காரணத்திற்கு இடங் கொடாதபடி நாம் மிகவும் எச்சரிக்கையாய் இருக்க வேண்டும். அறிந் தறியாமல் ஒரு சொல்லுக்கு மாத்திரம் நாம் சத்துருவுக்கு இடங் கொடுப்போமானால், அவன் நமது பல வீனத்தை உணர்ந்துகொண்டு, நம்மை அதம்பண்ணும் வழி வகைகளைக் கண்டறிந்துகொள்வான். மோசம்இல்லையென்று ஓர் சொற்பக் கிரத்தியத்திற்கு மாத்திரம் நாம் இடம்வைத்தால், அதைக்கொண்டு பசாசானவன் நம்மை அறநாசமாக்கிப்போடுவான். வெகு புத்தி கன பத்தியாய் அறநெறி பிறழாதொழுக வேண்டும் என்று தீர்க்க நிர்ணயம் சித்தாந்தித்து நடந்துவந்த யௌவனர் வெகுபேர் தந்திர சிரேஷ்டரான தோழரைச்சேர்ந்து மதிகெட்டு வழிவிட்டு மாய பாவ வலைக்குட்பட்டு அழிந்து போனார்கள். எச்சரிப்பு! எச்சரிப்பு!

தேசோபகாரி.

சிறுவர்களுக்கான வேடிக்கைக் கதைகள்.

ஓர் ஊரில் ஓர் அந்தணன் இருந்தான். அவனுக்கு சிராத்தாதிகள்செய்யும் வீடுகளில் பிராமணார்த்தம் செய்வதே ஜீவனம் இவன் மனைவியோ பரமசாது! புருஷன் ஒருவேளையாவது வீட்டில் சாப்பிடக்கூடாது. இத்துடன் பிரதிதினம் கால் ரூபாய் (பிராமணார்த்த தக்ஷிணை) தன்கையில் புருஷன் கொடுத்து விட வேண்டியது. அப்படி என்றைக்காவது கொடுக்காவிடில் அன்று புருஷன்பாடு அம்பலந்தான். வெண்சாமரைப் பிரயோகம் முதல் வீணாகானம் வரையில் அன்று இவன் வீட்டில் பார்க்கலாம். இவ

னுக்கு ஒரு நாள் போவது ஒரு யுகமாக விருக்கும். என் செய்வான் பாவம்! பொழுது விடிந்ததுமுதல் கால் ரூபாய் கிடைக்கும் வரையில் அவன் உயிர் அவனுடையதல்ல. இவ்விதமாகக் காலம் கழித்துவருநாளையில் ஒருநாள் மணி 12-ஆயும் இவனை பிராமணார்த்தத்திற்கு ஒருவரும் அழைக்கவில்லை; பிடித்தது பிராமணனுக்குக் கிலி; அந்தோ! சோறு கிடைக்காவிடினும் பரவாயில்லை; பெண்சாதிக்கு என்னசெல்லுகிறது என்கிற யோசனை மேலிட்டு, குறுவிசாரம் பிடித்து உட்கார்ந்தவர் உட்கார்ந்தவர்தான்; இச்சமயத்தில் அவன் நரிமுகத்தில் விழித்த மாதிரியாகப் பக்கத்தூரிலிருந்து ஒருவர் வந்து இவரை பிராமணார்த்தத்திற்கழைத்தார். கூண்டில் உயிர்வந்தது பிராமணனுக்கு. உடனே "வயிற்றில்பால்வார்த்தாயே" என்று சொல்லிக்கொண்டு அவருடன் சென்று பிராமணார்த்தம் உண்டு, கால்ரூபாய் தக்ஷணையையும் பெற்று அகாலத்தில் போஜனமருந்திய சிரமத்தினால் படுத்து நித்திரைபோய் விட்டார். துயிலெழுந்ததும் அஸ்தமிக்கும் தருணமாயிருந்தது. உடனே அவசரமாக ஊருக்குப் பயணப்பட்டுவந்தார். இருட்டோ கராகம்மென்றிருக்கிறது. அந்தணரோராத்திரி எந்நேரமானாலும் வீடுபோய்ச்சேர வேண்டியவர். கால்ரூபாய் கிடைத்த சந்தோஷத்தினால் இருட்டையும் கவனியாமல் அதிவேகமாக வருகிறான். வழியில் திருடர்கள் வந்துகொண்டிருக்கிறார்கள். இவர்களை அறிந்த அந்தணன் ஒரு செடிமறைவில் போய்ப்படுத்து ஒளித்துக்கொண்டான். திருடர்கள் காட்டில் ஓடும்போது அவர்கள் கால்களினால் இடறப்பட்டான். அவர்களோ "இது என்ன எழவு வேலங்கட்டை காலிலே இடறுதடா" என்று சொல்லிக்கொண்டு போனார்கள். பிராமணன் சும்மாயிருக்கக்கூடாதா!! "நுணலும் தன் வாயால் கெடும்" எனபதற்கேற்ப "ஹொ! ஹோ! உங்கவீட்டுக் கருவேலங்கட்டை பிராமணார்த்தம் சாப்பிட்டுவிட்டு கால் ரூபாயை வேஷ்டியில் முடிஞ்சிண்டு இப்படித்தான் படுத்துக்கொண்டிருக்கு மோடா முட்டாளே! போறவாளுக்கு சும்மாபோகப்பிள்ளையோ; என்னை

உதச்சிண்டுதான் போகணுமோடா காமாட்டி" என்ருன். திரு டர்கள் நல்லசமயம் வாய்த்ததென்று உடனே இவனைப் பிடித்து நையப்புடைத்து துணியையும் கால்ரூபாயையும் பிடிங்கிக் கொண்டுதுரத்திவிட்டார்கள், அந்தோ! அந்தணன்படும் பரிதாபமோ கட்டத்துணியற்றுக் கையிலிருந்த கால்ரூபாயும் போனதுமல்லாமல்வீடுசென்ருல் பெண்சாதிக்கு என்ன உத்தரம் சொல்வது என்றவிசனத்தினுல் வருத்தப்பட்டுத் திகிலடைந்து கடைசியாகப் பயந்து நடுங்கி, ஒடுங்கிப் பரதேவதையிடம் வந்து மெதுவாகக் கடனுக்குப் பிராமணுர்த்தம் சாப்பிட்டுவந்தேன் நாளைக்குத் தந்துவிடுவார். வாங்கிவந்து கட்டளைக் கால்ரூபாயையும் தந்து விடுகிறேன் என்று மன்னிப்புக் கேட்டுக்கொண்டான். தெய்வச்செயலாய் அன்று தேவியின் மனமிரங்கி மன்னிக்கப் பட்டான்.

சகோதரிகளே!- இக்கதையில் இத்துன்மார்க்கமுடையவள் ஜென்மாந்தரங்களில் என்ன பாபம் செய்தோ பிறர் அன்னத்தை உண்டும் "ஏற்பதிகழ்ச்சி" என்ற ஔவைப்பிராட்டியின் திவ்விய வாக்கியத்திற்குச் சிறிதும் சிறப்புத்தாராமல் பிறர்கைத்தனத்தை பரிதானமூலமாயும், தக்ஷிணையாகவும் பெற்றுக்காலம்கழிப்பவனைக் கணவனுக்கொள்ளநேர்ந்ததைப் பற்றிச் சிறிதும் சிந்தியாமல் அநேக கோடிகாலம் நரகத்தில் கடந்து உழலுந் தண்டனையை விளைக்கக்கூடியதான மகாபாபமாகிய புருஷ நிந்தனை, புருஷனை அவமதித்தல் இவைகளை கைக்கொண்டாளே! இவளுக்கு மீளா நரகம் கிடைக்கும் என்பதில் சந்தேகமில்லை, இவளைச்சொல்வதில் பயன்யாது? இக்கதாநாயகனுடைய மரியாதையினுலேயே இவ்வித்துன்பத்துக்காளானுளென்றறிக.

"புத்திமானே பலவான்"

முத்தம்மாள்.

பெண்கள் கல்வி.

"ஞானப்பிரகாசம்" என்னும் பத்திரிகை கூறுவது:—

இம்முறை எனது சகோதரிகளுக்கு நான் "எழுதும் பெண் வழிச்சேரல்" என்னும் விஷயம் நாணத்தைத் தருமென்பதறிவந்துளனாயினும், பெரும்பயன் தருவதொன்றாதலினால், அதனைச் சிறிது கூறுகின்றேன். ஆடவருள்ளே பெரும்பாலார், தாம்கற்றுரேல்லாயினும் தம்மேவல்வழியே நின்றொழுகுந்தன்மையளாகிய மனையாள் வழிப்பட்டு. காதற்பிணிபழுத்துப்பித்தேறியவுளத்தினராய், கற்றனவுங்கைகொடாது கழிய, அவள்முகமும்மொழியும் நோக்கி யஞ்சி, ; அவள் விதிப்பன, நன்றோ தீ;தாவென ஆராயாது முடித்து அவள் கருத்தை நிறைவேற்றுமதனையே விரதமாகக்கொண்டு, பேடிவாழ்க்கையராயுழன்று, நால்வர்நன்கு மதிக்கற்பாடழிந்து துன்புறுவதை உலகிபால் நம்மவரனைவரும் அறிவார்கள்.

ஆடவர்கள் வழிப்படலை நமக்கழகாவதன்றி அவரை நம் வழிப் படுத்தலினுமிழிதொழில் பிறிதில்லை. காமவின்பங் காரணமாகவும், நெருங்கியோரிடத்தென்றுமுடன் பயின்றிருக்கவேண்டிய விதியினாலும், ஆடவர்கள், அறிந்தும் அறியாதார் போன்று நம்வழிப்பட்டு, நம்மைத் துணையாகக்கொண்டு, தாமடைய விரும்பிய அறத்தினையும்; அவ்வறத்திற்கும் எமக்கும் அவர்க்கும் இன்றியமையாது வேண்டப்படும் பொருளீட்டத்தினையும் விடுத்து, அயலினரோடும் சுற்றத்தினரோடும் பகைகொண்டு ஆண்மையென்னு மதாரிடை வைகுமென்று இவனை நோக்கிப்பெரியோர் துன்புறுவதை அறிந்து தலைகுனிந்து நாணமுற்றுப் பெருமையிழப்பதற் கேதுவாய் நிற்பவர் நாமேயன்றோ.

அன்றியும் பெண்வழிச்செல்வோ னிவனெனப்படுமாயின், அவன்மனைவி, நியமிப்பாரற்றுக் கண்வழி மனம்செல்ல, அதன் வழியே களியாட்டயர்ந்து களிப்புற்றுக்கலகஞ் செய்யுபொரு காளிகாதேவியென்று பலராலும் தூற்றப் படுவாளென்பதையும் நினையுங்கள்.

ஸ்ரீராமபிரான் இலக்குமணர் கூறிய பொருள் பொதிந்த மொழிகளைத்திருச் செவியிற் கொள்ளாது, சீதாபிராட்டியார் கருத்தை நிறைவேற்றுமதனையே விரதமாகக்கொண்டு, மாயமானைப்பிடித்து நல்குமாறுமுயன்று, ஆக்கமும் பெருமையுமிழந்து, பகையும் பழியுந்துன்பமுங்கொண்டு, "மாமாயப்புன்பிறவிவேண்

டேனே வேண்டேனே" என்று புலம்பியழுதகதையினை அறியா தார் யாவர்?

தன் மனையாளை யஞ்சி ஒழுகு மாடவன், எடுத்துக்கொண்ட கருமத்தை முடிக்கும் வலியும் வீரமுமுடையனாயினும், பெண் வழிச்செல்லவே தன் தன்மைகெட்டு நிற்குமன்றே. பின் அவன் வினையைக் கடைபோக முடிக்குமாறெவ்வாறோ! இதற்கு ஸ்ரீராம பிரானே யமைந்தசான்று.

திருவள்ளுவநாயனார் பெண்வழிச்சேரல் என ஓரதிகாரம் வகுத்து விளையுந் தீமைகளை எடுத்து விளக்கினார். அதனைத் தழுவி கல்வியிற்பெரிய கம்பரும், மாரீசன் வதைப்படலத்திலவர் மொழிந்த பொருளினை மேற்கூறியகதை மேலிட்டு உலகியலறங்கள் விளக்கிச்செல்வர். லலிதாம்பாள்.

வர்த்தமானம்.

மணிக்கு 60 மைல் செல்லும் ஆகாயவிமானம்:—ஆஸ்டரிஷாட் என்னும் நகரில் சிலதினங்கட்கு முன்னர் ஓராகாய விமானம் யுத்த தளவாடங்களுடன் விடப்பட்டது. அது மணிக்கு 60 மைல் வீதமாக மேலே சென்றது.

பணப்பேய்:—இங்லாந்தில் துறவியைப்போல் நடித்துவசித்து வந்த சேபர் விடபர்ன் என்பவனிறந்த பின்னர் அவனிடத்து 14,89,219 பவுண்டு மதிப்புள்ள சொத்து இருந்ததென்று தெரிகிறது. இவன் தன துஜீவியகாலத்தில் பற்றற்றவன்போல் நடித்து வந்தமைபற்றி யிவனைப் பிச்சைக்காரனென்று கருதி யிவனுடன் ஒருவரும் நெருங்காதிருந்தனர். பொருளைத் தாமுமனுபவியாது, பிறர்க்குங் கொடாது, பரோபகாரமுஞ் செய்யாது சேமித்து வைக்கும் மூழமூடரு மிவ்வுலகத் திருக்கின்றனரே!

யுனைடேட்ஸ்டேட் ஜன கணிதம்:—யுனைடெட் ஸ்டேட்டில் 1910-ம் வருடமெடுத்த ஜன கணிதத்தின்படி 106 புருஷர்கட்கு 100 ஸ்திரீகள் விகிதமிருக்கின்றனராம்; அங்கு 47,332,122 புருஷர்களும் 44;640,144 ஸ்திரீகளு மிருக்கின்றனர். நீக்ரோக்களில் மாத்திரம் புருஷர்கட்கு மேல் 55,578 ஸ்திரீகளதிகமிருக்கின்றனராம். நீக்ரேக்களி னிருபாலரின் தொகை 9,828,294 ஆம் வெள்ளையர்களில் ஸ்திரீகள் புருஷரினும் குறைவாக விருப்பதற்குக் காரணம், ஸ்திரீகள் அத்தேசத்திற்கு அதிகமாகக் குடியேறுமையேயாம்.